1990 ஏப்ரல் 11]

அவசர சிகிச்சைப் பிரிவு வேண்டுமென்று கேட்டால் இந்த அரசின் நிதிநிலை அதற்கு இடம் கொடுக்காது. ஆகவே இருக்கின்ற வசதியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாவட்ட மருத்துவமனை பற்றி. மாவட்ட மருத்துவமனை ஐ.சி. யூனிட் இல்லாமல் இயங்க முடியாது 10 படுக்கைகளும் இதற்கான ஏற்பாடுகளும் இருக்க வேண்டும். ஆனால் நான்கில் ஒரு பங்கு கூட அங்கே இல்லை. அதுவும் நான்கு மைல் தொலைவில். அந்த இடம் அந்த நகரத்தின் இதயத்தைப் போன்ற நடுப்பகுதி. அதில் ஆக்சிடெண்ட் கேஸ் ஏராளமாக ஏற்படுகிறது. ஆகவே அந்த இடத்தில் ஒரு ஐ.சி. யூனிட் ஏற்படுத்துவதால் அரசுக்குப் பணச் செலவு ஏற்படும் என்பது உண்மைதான். ஆனால் மிக மிகத் தேவையான நடவடிக்கை என்ற முறையில் அரசு கவனிக்குமா? மக்களுடைய கோரிக்கை என்ற அளவில் அதைக் கவனிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளேயே இதுபோன்ற அவசர சிகிச்சைப் பிரிவை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அது எந்த அரசாலும் செயல்படுத்த முடியாத ஒன்றாகத்தான் இருக்கும்.

9-45 மணி

ஆகவேதான், மாவட்ட மருத்துவமனை இருக்கின்ற அதே ஊரிலே மற்றொரு ஐ.சி. யூனிட்டும் கேட்பது எந்த அளவிற்கு நியாயமானது என்பதை உறுப்பினரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும் அந்த மருத்துவமனையிலேயே இரண்டு உடனடியாகச் செல்லக் கூடிய ஊர்திகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆம்புலன்ஸ் வசதிகளும் இருக்கின்றன. ஆகவே, மாவட்ட மருத்துவமனையினுடைய வசதிகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமே தவிர, நான்கு கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிற நகர மருத்துவமனைக்கும் இதைக் கேட்பது சரியாக இருக்காது என்றே கருதுகிறேன்.

## குடி தண்ணீர் வழங்கும் திட்டம்

*3832—திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, அபிராமம் ஆகிய இரண்டு பேரூராட்சிகளுக்கும் உலக வங்கித்திட்டத்தின் மூலம் குடி தண்ணீர் வழங்கும் திட்டம் முடிவு பெறாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், காலதாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கமுதி-அபிராமம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குத் தேவையான குடிநீர் எற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மூன்று ஆழ்குழாய்க் கிணறுகளிலிருந்தும் மற்றும் புதிதாக அமைக்கப்பட விருக்கும் நான்கு ஆழ்குழாய்க் கிணறுகளிலிருந்தும் விநியோகிக்கப் படவுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தேர்ந் தெடுக்கப்பட்ட புதிய நான்கு ஆழ் குழாய் கிணறுகள் அமைக்கப்பட விருப்பதில் அங்கே தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. பொது மக்கள் அதற்கான எதிர்ப்புகளைத் தெரிவித்து வருகின்றார்கள். எனினும் அங்கேயிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் வருவாய் அதிகாரிகள் ஆகியோருடைய ஒத்துழைப்போடு பொதுமக்களுடன் பேசி இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கின்றது.

## தஞ்சை ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனை.

*7063—திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையில் பணியாற்றும் ஏழு பணியாளர்களுக்கு 7 மாத காலமாக ஊதியம் வழங்கப்படவில்லை என்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): இப்பொருள் பற்றி அரசு ஆணை மற்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கோ. வீரையன் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையில் பணியாற்றிய ஏழு பணியாளர்களுக்கு, அவர்கள் நியமிக்கப்பட்டதற்கு பிறகு, உரிய ஆணைகள் வழங்கப்படாததனாலே ஏழு மாதம் அவர்களுக்கு ஊதியம் கிடைக்காமலே இருந்தது. இந்தக் கேள்வி எழுப்பப்பட்டு